பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 28 வியாழக்கிழமை 14.11.2024 கதிர் 007

## இனி இது ரகசியம் அல்ல!

இலங்கையின் தேசிய ஒலிம்பிக் குழுவின் (என்ஓசி) பொதுச்செயலாளர் மக்ஸ்வெல்டிசில்வாவை இடைநீக்கம் செய்யுமாறு சர்வதேச ஒலிம்பிக் குழு (ஐஓசி) அவசரமாக 2

# இன்று வாக்களிப்பு 7 முதல் 16 மணி வரை

### 10ஆவது நாடாளுமன்றத்திற்கு பிரதிநிதிகளை தெரிவு செய்ய

**10ஆவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. அதற்கமைவாக இன்று காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.**

**இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.**

**22 தேர்தல் மாவட்டங்களில் அமைந்துள்ள வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகளைக் கொண்டு செல்லும் பணிகள் இன்று காலை முதல் முன்னெடுக்கப்பட்டு நிறைவுக்குவந்துள்ளதோடு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

**அதற்கமைய, இத்தேர்தலில் 2024 வாக்காளர் பட்டியலுக்கமைய ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.**

**அத்துடன் இத்தேர்தலில் 8,361 அபேட்சகர்கள் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களில் போட்டியிட வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளனர்.**

**வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக நாடு முழுவதும் 13,421 வாக்குச் 2**

## அருகம்பே தொடர்பான அமெ. அறிவிப்பு விலக்கப்பட்டது

மறு அறிவித்தல் வரும்வரை அறுகம்பே பகுதிக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு அமெரிக்க தூதரகம் ஒக்டோபர் 23 விடுத்திருந்த எச்சரிக்கையை இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகம் நீக்கியுள்ளதாக அதன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையை திரும்பப் பெறுமாறு அமெரிக்க தூதரகத்திடம் 8

## மின்னல் தாக்கி விவசாயி இறப்பு

### மதவாச்சியில் சம்பவம்

வயல்வெளியில் உழுது கொண்டிருந்த நபரொருவர் நேற்று மின்னல் தாக்கி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். மதவாச்சிப் பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திடீரென பெய்த புருயாய வயல்வெளியில் உழுது கொண்டிருந்த விவசாயி ஒருவரே மாலை 5.30 மணியளவில் மின்னல் தாக்கத்திற்கு உள்ளானார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் மதவாச்சி குளிக்கடை பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய அப்புஹாமி முதியன்செலகே லக்மால் ஜயக்கொடி என்பவரே உயிரிழந்துள்ளார்.

வயல்வெளியில் வேலை செய்துகொண்டிருந்தபோது மின்னல் தாக்கி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மதவாச்சி வைத்தியசாலைக்கு 2



## கடன் அடைப்பதுதான் இப்போது மிக முக்கியம்

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தேசிய மற்றும் சர்வதேச கடனை அடைப்பதுதான் இப்போது முக்கியமானது. அதற்காக தேசிய வருமானத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் புதிய வேலைத்திட்டத்துடன் 2

## பொதுத் தேர்தல் குறித்து 3,359 முறைப்பாடுகள்

இன்று நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பில் இதுவரை (செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை) 3,359 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 956 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களிற்கு 2,346 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களிற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 22 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 35 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

## ஏரிஎம் இயந்திரத்தை சேதப்படுத்திய பொலிஸ் சர்ஜன்ட் பணி இடைநிறுத்தம்

வங்கிதன்னியக்கபணப்பரிவர்த்தனை (ஏ.டி.எம்) இயந்திரத்தில் அட்டை சிக்கியதால் ஆத்திரமடைந்து அந்த இயந்திரத்தைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொது ஒழுங்கு முகாமைத்துவ பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

நவம்பர் 9 அன்று கொழும்பு திபிரிகசாய பிரதேசத்தில் 2

## விடுமுறைகள் இரத்து

புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ள நிலையில், நவம்பர் 18 முதல் 22 வரை நாடாளுமன்றத்தின் அனைத்து பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளினதும் விடுமுறை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசேட சுற்றறிக்கை ஒன்றை 2

## முன்னாள் அமைச்சர்களுக்கான அரச இல்லங்களுக்கு பாதுகாப்பு

### இராணுவம் அழைக்கப்பட்டுள்ளது

முன்னாள் அமைச்சர்கள் தங்கியிருந்த உத்தியோகபூர்வ இல்லங்களின் பாதுகாப்பிற்காக இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு விடுத்த கோரிக்கையின் பிரகாரம் இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.

அதற்கமைய, 30 உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக 50 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று 2

## பண மோசடிக் குற்றச்சாட்டில் பொலிஸ் அதிகாரி இடைநீக்கம்

போக்குவரத்துப் பொலிஸாருக்கு வழங்க வேண்டிய பணத்தை போலி நாணயத்தாள்கள் மற்றும் கையொப்பங்களைப் பயன்படுத்தி மோசடி செய்த குற்றச்சாட்டின் கீழ் நீர்கொழும்பு பொலிஸ் நிலைய கட்டுப்பாட்டு பிரிவின் பொறுப்பதிகாரி பணி இடைநீக்கம் செய்யப்பட்டார் என்று நீர்கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். ஒரு லட்சத்து 92 ஆயிரத்து 400 ரூபாயை அவர் இவ்வாறு மோசடி செய்திருக்கின்றார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றிய பெண் பொலிஸ் கண்காணிப்பாளரே (இன்ஸ்பெக்டர்) பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டில் நீர்கொழும்பு பொலிஸ் பிரிவின் போக்குவரத்துப் பொலிஸாருக்கு வழங்கப்பட வேண்டிய வெகுமதிப் பணத்தையே இந்த அதிகாரி மோசடி செய்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. போலி நாணயத்தாள்களை வழங்கியும் மற்றும் போலிக் கையொப்பங்களை பயன்படுத்தியும் அவர் இந்த மோசடியைச் செய்தார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

நீர்கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர் மோசடி செய்தது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த முறைகேடு தொடர்பில் குறித்த அதிகாரிக்கு நவம்பர் 12 முதல் பணிபுரிய தடை விதிக்கப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்தது.

## அமைச்சர்களின் மாளிகைகளை சுற்றுலா தங்ககமாக்க யோசனை

அமைச்சர்களுக்கு வழங்கப்படும் அரச உத்தியோகபூர்வ சொகுசு மாளிகைகளை சுற்றுலா இல்லங்களாக மாற்றுவதற்கான யோசனை ஒன்றில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த சொகுசு மாளிகைகளில் இருந்து வெளியேறுமாறு முன்னாள் அமைச்சர்கள் கேட்கப்பட்டுள்ள நிலையில், அவற்றை என்ன செய்வது என அமைச்சரவையில் கேட்க பொது நிர்வாக அமைச்சுகளின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர். இந்நிலையிலேயே அவற்றை சுற்றுலா இல்லங்களாக மாற்றும் யோசனை ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எஸ்.அலோக பண்டார மற்றும் அதன் மேலதிக செயலாளர் ஜானக ஜயசுந்தர உள்ளிட்ட குழுவினர் நேற்று அமைச்சர்களின் சொகுசு மாளிகைகளை நேரில் பார்வையிட்ட பின்னர் இந்த யோசனை 2

## இனி இது .....

அறிவித்துள்ளது.

தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் சுரேஸ் சுப்பிரமணியத்திற்கு இது தொடர்பான தனது மின்னஞ்சலை சர்வதேச ஒலிம்பிக் குழு அனுப்பி வைத்துள்ளது. இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

டி சில்வா நிதி முறைகேடுகள் மற்றும் நெறிமுறை மீறல்களில் ஈடுபட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டியுள்ள சர்வதேச ஒலிம்பிக் குழு, அதற்குப் பதிலளிக்கும் வகையில் அவர் உடனடியாகப் பதவி விலக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

.....................

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்கு வழங்கப்பட்ட பெரும் வரப்பிரசாதங்களை வெட்டிக் குறைப்பதில் தற்போதைய அநுர ஆட்சி கவனம் செலுத்தி வருவது ஒருபுறம் நடக்கின்ற அதே நேரத்தில், இந்திய சுற்றுலாப் பயணிகளைக் கவருவதை நோக்கமாகக் கொண்ட ரணிலின் திட்டங்கள் தொடர்கின்றன.

இதிகாசமான இராமாயணத்தை முன்வைத்து இந்திய சுற்றுலாவிகளை இலங்கைக்கு அழைத்து வரும் திட்டத்தை ரணில் தீட்டினார். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் பாலம் அமைப்பதன் பின்னாலும் அவரது இந்தத் திட்டமே முதன்மை பெற்றிருந்தது. இப்போது அந்தத் திட்டத்தை சிறிலங்கன் எயார் லைன்ஸ் தனது கையில் எடுத்துள்ளது.

இராமாயணத்துடன் தொடர்புடைய இலங்கையின் புகழ்பெற்ற தளங்கள் வழியாகப் பயணிக்கும் 'ராமாயணப் பாதையை' ஊக்குவிக்கும் அதன் கவர்ச்சிகரமான புதிய விளம்பரம் வெளியாகியுள்ளது. ராவணனின் குகை, சீதை அம்மன் கோயில் மற்றும் புகழ்பெற்ற ராமர் சேது பாலம் போன்ற இடங்கள் வழியாக பார்வையாளர்களை வழிநடத்தும் ஒரு பாட்டி தனது ஆர்வமுள்ள பேரனுக்கு ராமாயணக் கதையை விவரிக்கும் வகையில் இந்த விளம்பரம் எடுக்கப்பட்டுள்ளது.

செழுமையான கதைசொல்லல் மற்றும் ஆச்சரியமூட்டக்கூடிய காட்சிகளின் கலவையுடன், இந்த விளம்பரம் இலங்கையின் கலாச்சார பாரம்பரியத்தை கொண்டாடுகிறது, அதே நேரத்தில் ஆன்மீக சுற்றுலாவுக்கான முதன்மையான இடமாக நாட்டை நிலைநிறுத்துகிறது, அதன் வரலாற்று மற்றும் புராண அடையாளங்களை அனுபவிக்க பயணிகளை அழைக்கிறது.

இந்த விளம்பர் நிகழ்நிலையில் (ஒன்லைன்) விரைவாக பிரபலமடைந்துள்ளது, ஐந்து நிமிட விளம்பரம் ஒரு பாட்டி மற்றும் அவரது இளம் பேரனுக்கு இடையே ஒரு மென்மையான தருணத்துடன் தொடங்குகிறது, அவர் ஒரு குழந்தைகள் புத்தகத்திலிருந்து ராமாயணத்தைப் பேரனுக்குப் படித்துக் காட்டுகிறார். இருந்தாலும் இந்த விளம்பரத்திலும் இராவணன் ஒரு அரக்கனாகவே அறியப்படுகிறார். சீதையை கடத்திய பிறகு ராவணன் என்ற அரக்கன் சீதையை எங்கே அழைத்துச் சென்றான் என்று பேரன் கேட்கிறான். பதிலுக்கு, பாட்டி அவரையும் பார்வையாளர்களையும் காவியத்தின் இதயத்திற்குள் அழைத்துச்செல்கிறார், இப்போது இலங்கை என்று அழைக்கப்படும் லங்கா தீவில் அமைக்கப்பட்ட காட்சிகளை அவர் விவரிப்பதாக இந்தக் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தம்மை ஆரியர்களின் வழித்தோன்றல்கள் என்று வரலாற்றில் நிலைநிறுத்திக்கொண்டுள்ள சிங்களவர்கள் தமிழ் மன்னனான இராவணனை தம் மூதாதையராக வரிந்துகொள்ள முயற்சிகும் இந்த முயற்சி வெறும் பணத்துக்கானதுதானா அல்லது அதையும் தாண்டித் தொடருமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இன்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. 22 தேர்தல் மாவட்டங்களிலும் 13,314 தேர்தல் தொகுதிகள் காணப்படுவதோடு 408 அரசியல் கட்சிகளில் இருந்து 5,015 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். 282 சுயேச்சை குழுக்களில் இருந்து 3,346 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

பெண் வாக்காளர்களுக்காக ஒதுக்கப்பட்ட வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை 107 ஆக காணப்படுவதோடு 152,000 அலுவலர்கள் வாக்குச் சாவடிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அண்ணளவாக 27,000 பொலிஸார் வாக்குச் சாவடிகளில் பாதுகாப்புக்காக அமர்த்தப்பட்டுள்ளனர்.

54 வாக்கு எண்ணும் வளாகங்களில் 1,582 வாக்கு எண்ணும் மண்டபங்கள் காணப்படுவதோடு தபால் வாக்கு எண்ணுவதற்காக 452 மண்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு 80,000 வரையிலான அலுவலர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். அதற்கமைவாக, வாக்கு எண்ணும் மண்டபங்களின் மொத்த எண்ணிக்கை 2,034 ஆகும். அத்துடன் வாக்களிப்பு தொடர்பான முடிவுகளை அறிவிப்பதற்காக 22 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு

759,083 பேரிடமிருந்து தபால் வாக்கு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்ததோடு அங்கீகரிக்கப்பட்டவர்களாக 737,902 பேர் காணப்படுகின்றனர்.

7,850 சிறிய வாக்குப் பெட்டிகளும், 3,775 நடுத்தர வாக்குப் பெட்டிகளும், 2525 பெரிய வாக்குப் பெட்டிகளும் இம்முறை தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ளன.

வாக்கெடுப்பு நிலையங்களுக்கு கையடக்க தொலைபேசி, கூரிய ஆயுதங்கள் உள்ளிட்ட பொருட்களை எடுத்துச்செல்ல தடை விதிக்கப் பட்டுள்ளது.

அதற்கமையை வாக்கெடுப்பு நிலையத்தில் புகைப்படம் எடுத்தல், காணொளி பதிவு செய்தல் போன்ற செயற்பாடுகளுக்கு இடமளிக்கப்பட மாட்டது என்றும் சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## முன்னாள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவப் பேச்சாளர், மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவித்துள்ளார்.

அரசின் உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் தகுதியானவர்களிடம் ஒப்படைக்கும் வரை இந்த பாதுகாப்பு திட்டம் அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அயலுறவு அமைச்சகம் முன்பு கோரிக்கை விடுத்திருந்தது.

இலங்கையின் அறுகம்பேயில் உள்ள பிரபல சுற்றுலாத் தலங்கள் மீது பயங்கரவாதத் தாக்குதல் நடத்தும் அபாயம் உள்ளதாகவும், மறு அறிவித்தல் வரும் வரை அப்பகுதிக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும் அமெரிக்கத் தூதரகம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

ஐக்கிய இராச்சியம், நியூசிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா, சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளும் அமெரிக்கத் தூதரகத்தின் எச்சரிக்கையை மேற்கோள் காட்டி இலங்கைக்கு வருகை தரும் தமது பிரஜைகளை மிகவும் அவதானமாக இருக்குமாறு எச்சரித்திருந்தன.

அமெரிக்காவின் பாதுகாப்பு அறிவிப்பை மேற்கோள் காட்டி, இஸ்ரேலிய தேசிய பாதுகாப்பு கவுன்சில், அறுகம்பே பிராந்தியத்தில் உள்ள இஸ்ரேலியர்கள், நாட்டின் தெற்கு மற்றும் மேற்கு கரையோரப் பகுதிகளை விட்டு வெளியேறுமாறு அறிவிப்பு ஒன்றையும் வெளியிட்டது. மேலும், இலங்கையின் பிற பகுதிகளில் உள்ள இஸ்ரேலியர்கள் கவனமாக இருக்கவும், மக்கள் கூடும் இடங்களை தவிர்க்கவும் இஸ்ரேலிய தேசிய பாதுகாப்பு கவுன்சில் அறிவுறுத்தியது.

தற்போது அமெரிக்காவின் அறிவிப்பு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

## விடுமுறைகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ள நாடாளுமன்றத்தின் பணிப்பாளர் (நிர்வாகம்) இந்திரா திஸாநாயக்க, அந்த வாரத்தில் நாடாளுமன்ற ஊழியர்கள் கட்டாயம் பணிக்குச் சமூகமளிக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்தக் காலப்பகுதியில், புதிய நாடாளுமன்றத்தை நிறுவுவதற்கான பூர்வாங்கப் பணிகளுக்கு நாடாளுமன்றத்தின் அனைத்துப் பிரிவுகளும் தயாராகும்.

10ஆவது நாடாளுமன்றம் நவம்பர் 21 ஆரம்பமாகவுள்ளது. தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட செயலமர்வு நவம்பர் 25, 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதில் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நடைமுறைகள் குறித்து விரிவான அறிவு வழங்கப்படும்.

நவம்பர் 18, 19, 20ஆம் திகதிகளில் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதாக நாடாளுமன்றத்தின் பிரதிச் செயலாளர் நாயகமும் தலைமை அதிகாரியுமான சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, புதிய நாடாளுமன்றத்திற்கு விசேட பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர். மேலும், புதிய நாடாளுமன்றத்துக்காக, அறை உட்பட பல இடங்கள் புனரமைக்கப்பட்டு, நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

## அமைச்சர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர்கள் பயன்படுத்திய 28 சொகுசு மாளிகைகள் ஆளும்தரப்பிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்தது.

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ள அரச வங்கி ஒன்றின் ஏ.டி.எம் இயந்திரத்தில் பணம் எடுக்கச் சென்ற சந்தேகநபர், மதுபோதையில் இருந்ததால், கார்ட் தடைபட்டு, பணம் எடுக்க முடியாமல் போயுள்ளது. இதனால் ஆத்திரமடைந்து ஏ.டி.எம் இயந்திரத்தை தாக்கி சேதப்படுத்தியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நாரஹேன்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேகநபரான சார்ஜன்ட் கைது செய்யப்பட்டார். இது தொடர்பில் பொது ஒழுங்கு முகாமைத்துவ பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சந்தேகத்திற்குரிய சார்ஜென்ட்டை நவம்பர் 12 முதல் பணி இடைநிறுத்தம் செய்துள்ளார்.

## மின்னல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு செல்லப்பட்டார். எனினும் வழியிலேயே அவர் உயிரிழந்துவிட்டார் என்று அங்கு தெரிவிக்கப்பட்டது.

## கடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படவேண்டும். அதனை மறக்கவேண்டாம் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற பெண்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் இருக்கும் பிரதான பிரச்சினை பொருளாதாரமாகும். 2022ஆம் ஆண்டு பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்தது. அதன் பிரகாரம் எமது நாடு வங்குரோத்து அடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. அந்த நெருக்கடியிலிருந்து வெளியேறுவதே எமக்கு முதல் தேவையாக இருந்தது. அதனை நாங்கள் மாத்திரம் அறிவித்தால் போதாது. சர்வதேசமும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

நாணய நிதியத்துடன் கலந்துரையாடுமாறு உலக நாடுகள் எங்களுக்குத் தெரிவித்திருந்தன. சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப் பாட்டுக்கு வந்த பின்னர் அவர்களுக்கு அறியத்தருமாறும் அந்த நாடுகள் தெரிவித் தன. நாங்கள் 18 நாடுகளிடம் கடன்பெற்றிருந்தோம். அதற்கு மேலதிகமாக பிணைமுறிபத்திரங்களையும் உலகில் தனியாருக்கு விற்பனை செய்திருந்தோம்..

ஆரம்பமாக இந்த வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடினோம். வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரத்தை உறுதிப்பாடான நிலைக்குக் கொண்டுவந்து கடன் செலுத்துவது தொடர்பில் நிலைபேறான தன்மையை ஏற்படுத்துவது தொடர்பில் நாங்கள் கலந்துரையாடினோம்.

மீண்டும் கடன் செலுத்துவதற்கு எந்தளவு காலம் வழங்க முடியும் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடினோம். எமது கடனில் எந்தளவு தொகையை குறைத்து வழங்க முடியும் என்ற விடயம் தொடர்பாகவும் நாங்கள் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வந்தோம்.

2028ஆம் ஆண்டில் கடன் அடைப்பது ஆரம்பமாகும் என நாணய நிதியம் எமக்கு தெரிவித்தது. 2028ஆம் ஆண்டு கடன் செலுத்தாவிட்டால் எமக்கு பிரச்சினையாகும். 2028இல் கடன் செலுத்த ஆரம்பித்து 2042 ஆகும்போது கடன் செலுத்துவதை முடிவுக்கு கொண்டுவருமாறும் அவர்கள் எமக்கு அறிவித்தார்கள்.

கடன் தந்த 18 நாடுகள் மற்றும் பிணைமுறி பத்திரம் மூலம் எங்களுக்கு 8000 முதல் 12000 மில்லியன் டொலர் வரை பெற்றுக்கொள்ள முடியும். அந்த நடவடிக்கையை மேற்கொள்ள எமக்கு பொருளாதார இலக்கு இருக்கிறது. அந்த பொருளாதார இலக்குக்கு அமைய செயற்பட்டாவிட்டால் எமக்கு நன்கொடைகள் கிடைப்பதில்லை.

எமக்கு கடன் செலுத்த முடியாது என அறிவித்தால் மீண்டும் நாங்கள் வங்குரோத்து நிலைக்கு ஆளாகுவோம். இதனை நாங்கள் 18 நாடுகளுடன் கலந்துரையாடினோம். அந்த 18 நாடுகளும் இதற்கு இணக்கம் தெரிவித்தன. சிறிய திருத்தங்களை முன்வைத்தோம். அதன் பின்னர் சர்வதேச நாணய நிதியம் மற்றும் இந்த நாடுகளுடன் இருந்த இரு தரப்பு ஒப்பந்தத்தை நாங்கள் பிணைமுறியாளர்களுக்கு பெற்றுக்கொடுத்தோம். அவர்களும் அதற்கு இணக்கம் தெரிவித்தனர்.

நாங்கள் தேர்தலுக்கு செல்ல முன்னர் அந்த விடயங்களின் நடவடிக்கைகள் அனைத்தையும் முடித்தோம் அதன் பிரகாரம் ஒக்டோபர் 4 புதிய ஆளும்தரப்புக்கும் அறிவித்தோம். அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். தற்போது நாங்கள் அதன் பிரகாரம் வேலைசெய்யவேண்டும். எங்களுக்கு கடன் செலுத்த முடியும் என்பதை காட்ட வேண்டும்.

அதன் பின்னர் நாங்கள் 2028 முதல் கடனை அடைக்கவேண்டும். கடன்பெற்ற பின்னர் அவற்றை செலுத்தும்போதும் இணக்கப்பாட்டுக்கமைய செயற்பட வேண்டி இருக்கிறது. ஆரம்ப சில வருடங்களில் எங்களுக்கு 300 மில்லியன் டொலர் செலுத்த இருக்கிறது. அதன் பிரகாரமே நாங்கள் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செல்கிறோம்.

அதேபோன்று தேசிய கடன்களை மீளச் செலுத்துவதற்கும் வேலைத்திட்டங்களைத் தயாரித்தோம். தேசிய மற்றும் சர்வதேச கடன் என மொத்தமாக 84000 மில்லியன் டொலர் இருக்கிறது. அதில் 42 மில்லியன் டொலர் வெளிநாட்டு கடனாகும். அடுத்த அரைவாசி தேசிய கடனாகும். எமக்கு இருக்கும் பெரிய பிரச்சினை 2028ஆம் ஆண்டில் இந்த கடனை செலுத்த இருப்பதாகும்.

இதனை செய்யாவிட்டால் நாங்கள் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்படும். அதனை தடுப்பதாக இருந்தால் நாங்கள் எமது பொருளாதார இலக்கை அடைந்துகொள்ளவேண்டும். அவ்வாறு செய்வதாக இருந்தால் 2028ஆம்போது எமது அரச வருமானம் தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 15 வீதமாக இருக்க வேண்டும். தற்போது அது நூற்றுக்கு 12 வீதத்துக்கும் குறைவாகும். ஒவ்வொரு வருடமும் அந்த அளவை அதிகரித்துக்கொள்ள வேண்டும்.

தேவையான வருமானத்தை பெற்றுக்கொள்ள மக்கள் மீது புதிய வரிகளைச் சுமத்த முடியாது. வட் வரி அதிகரிக்க முடியாது. அப்படியானால் புதிய வருமானம் என்ன? அவற்றை எவ்வாறு பெற்றுக்கொள்வது? அத்துடன் எங்களுக்கு நிவாரணம் வழங்க முடியுமா?. அடுத்த வருடம் நிதி தேடிக்கொவதாக இருந்தால் வாகனம் இறக்குமதிக்கு இடமளிக்கவேண்டும்.

அதன் மூலம் தீர்வை வரி கிடைக்கும். அதேநேரம் எங்களுக்கு பொருளாதாரத்தை விரைவாக முன்னேற்ற முடியுமானால் நிறுவனங்களினால், வியாபாரங்களினால் எமது வரி வருமானம் அதிகரிக்கும். அத்துடன் வரி செலுத்தவேண்டிய சிலர் அதனை தவிர்த்து வருகின்றனர். அந்த வரிகளை அறவிட்டுக்கொள்ளும் அளவை அதிகரித்துக்கொள்ள வேண்டும். பின்னர் புதிய வரிகள் தொடர்பில் எங்களுக்கு சிந்திக்க வேண்டி ஏற்படும்.

2025ஆம் ஆண்டுக்காக இவ்வாறான வேலைத்திட்டம் தொடர்பாகவே எமக்கு சிந்திக்க இருக்கிறது . இதுதொடர்பில் திறைசேரி எவ்வாறு கலந்துரையாடுகிறது என இன்று எனக்கு தெரியாது. அத்துடன் அந்த நடவடிக்கைகள் முடிவடைவதில்லை. அடுத்த வருடம் எங்களுக்கு 6 ரில்லியன் ரூபாயைத் தேடிக்கொள்ள வேண்டி இருக்கிறது. அந்தப் பணத்தை எங்கிருந்து தேடிக்கொள்வது?. எந்தவொரு ஆளும்தரப்பும் இதுதொடர்பாகவே அதானம் செலுத்த வேண்டி இருக்கிறது. இதுதொடர்பில் கவனம் செலுத்தாமல் சத்தமிட்டும், வேறு விடயங்களை கதைத்தும் பயன் இல்லை.

அதனால் எங்களுக்கு பழைய முறையில் வியாபாரம் செய்ய முடியாது. பழைய முறையில் அரசியல் செய்ய முடியாது. பழைய முறையில் ஊடகங்களைக் கொண்டுசெல்லமுடியாது. ஒவ்வொருவரும் புதிய வேலைத்திட்டத்துடன் செயற்படவேண்டும். அதனை மறக்கவேண்டாம். எமக்கு கடன் செலுத்தும் நிலை இல்லாமல் போனால் அனைத்தும் அழிந்துவிடும். நாங்கள் அதனை நினைவில் வைத்துக்கொண்டு முன்னோக்கிச்செல்ல வேண்டும் என்றார்

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் மக்கள் இம்முறையும் ஒரு தேசமாக ஓரணியில் திரண்டு தமிழ்தேசிய இனநலனை முன்னிலைப்படுத்தி வாக்களிக்குக

## கனடிய தமிழர் தேசிய அவை கோரிக்கை

தமிழ் மக்கள் இம்முறையும் ஒரு தேசமாக திரண்டு தமிழ்தேசிய இனத்தின்நலனைமுன்னிலைப்படுத்தி வாக்களிக்கவேண்டும் என கனடிய தமிழர் தேசிய அவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் கனடிய தமிழர் தேசிய அவை மேலும் தெரிவித் துள்ளதாவது -

தமிழ் மக்கள் வழக்கமாக காலம்காலமாக இடம்பெற்றுவரும் தேர்தல்களில் தனிமனித நலனை முன்னிலைப்படுத்தாது தமிழ் தேசிய இனத்தின் கூட்டு நலனை முன்னிலைப்படுத்திதமதுவாக்குகளை செலுத்தி தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து வந்திருக்கின்றார்கள்.

அதேபோன்று நவம்பர் இன்று நடைபெறவுள்ள ஶ்ரீலங்காவின் நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்மக்கள் ஒருதேசமாகதிரண்டு75வருடங்களிற்கு மேலாக இடம்பெற்றுவரும் மாபெரும் வீரமும் உயரிய தியாகமும் நிறைந்த விடுதலைப்போராட்டத்திற்கும் மத்தியில் இன்றும் ஓயாது தொடர்ந்துகொண்டிருக்கும் தமிழ் மக்களின் உரிமைக்கான பயணத்திற்கு வலுச்சேர்ப்பார்கள் என எதிர்பார்க்கன்றோம்.

இது தொடர்பில் கனடிய தமிழர் தேசிய அவை மேலும் தெரிவித்துள்ளதாவது -

தமிழ் மக்கள் வழக்கமாக காலம்காலமாக இடம்பெற்றுவரும் தேர்தல்களில் தனிமனித நலனை முன்னிலைப்படுத்தாது தமிழ் தேசிய இனத்தின் கூட்டு நலனை முன்னிலைப்படுத்தி தமது வாக்குகளை செலுத்தி தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து வந்திருக்கின்றார்கள்.


அதேபோன்று நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள ஶ்ரீ லங்காவின் நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்மக்கள் ஒரு தேசமாக திரண்டு 75வருடங்களிற்கு மேலாக இடம்பெற்றுவரும் மாபெரும் வீரமும் உயரிய தியாகமும் நிறைந்த விடுதலைப் போராட்டத்திற்கும் மத்தியில் இன்றும் ஓயாது தொடர்ந்துகொண்டிருக்கும் தமிழ் மக்களின் உரிமைக்கான பயணத்திற்கு வலுச்சேர்ப்பார்கள் என எதிர்பார்க்கன்றோம்.

ஶ்ரீலங்காவில் தொடர்ந்தும் ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் தமிழ்மக்களின் சுயநிர்ணய அடிப்படையில் அமையவேண்டிய தீர்வை தமிழர் தேசத்திற்கான அரசியல்தீர்வை நிராகரித்ததும்,ஶ்ரீ லங்காவின் ஒற்றையாட்சி கட்டமைப்பை தொடர்ந்து திணித்தும் ஐக்கியநாடுகள் மனித உரிமை சபையால் உருவாக்கப்பட்ட அனைத்துலக விசாரணை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறைகளை நோக்கிய தீர்மானங்களை நிராகரித்தும்,தமிழன அழிப்பை புரிந்தவர்களிற்கான பொறுப்புகூறலை நிராகரித்தும் வந்துள்ளனர்.

தற்போதைய அரசாங்கமும் இவ்வாறான பாதையில் பயணிக்க முயல்வதை அவதானிக்க முடிகின்றது.

எனவே தமிழன அழிப்பிற்கான அனைத்து பொறுப்புக்கூறல் மற்றும் பரிகார நீதி தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வை ஏற்றுக்கொண்டு இவற்றை அடைவதற்காக உழைப்பதிலும், அத்தோடு தமிழ் மக்கள் ஒரு தேசமாக அடையாளப்படுத்தப்படுவதற்கு ஆதாரமாக இருக்கின்ற சமூக பொருளாதார கலாசார அனைத்து கூறுகளின் சிதைவுகளை தடுத்து நிறுத்துவதிலும்,அவற்றை மீள்கட்டுமானம் செய்வதிலும் அர்ப்பணிப்போடும் உண்மையாகவும் மற்றும் செயலிலும் கடைப்பிடிக்க கூடிய ஆளுமை மிக்க வேட்பாளர்களை கண்டறிந்து அவர்களை தெரிவு செய்து தமிழ் மக்களின் தெரிவாக நாடாளுமன்றம் அனுப்புவதே காலத்தின் தேவையாகும். - என்றுள்ளது.

# கொக்கைன் போதைப்பொருளுடன் சியராலியோன் பிரஜை கைதானார்



கொக்கைன் போதைப்பொருளுடன் சியராலியோன் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 32 வயதுடைய சியராலியோன் பிரஜை ஆவார்.

சந்தேக நபர் துருக்கியின் இஸ்தான்புல் நகரத்திலிருந்து செவ்வாய்க்கிழமை அதிகாலை 05.49 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

பின்னர், சந்தேக நபர் 'கிரீன் சேனல்' வழியாக விமான நிலையத்தை விட்டு வெளியேறமுற்பட்ட போது சுங்க போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபர் கொக்கைன் போதைப்பொருளை விழுங்கி வயிற்றில் சேகரித்து வைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சந்தேகநபரின் வயிற்றிலிருந்து 56 கொக்கைன் மாத்திரைகள் வெளியேற்றப் பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட கொக்கைன் போதைப்பொருளின் மொத்த பெறுமதி சுமார் 430,000 ரூபா ஆகும்.

சந்தேக நபர் சுமார் 80 கொக்கைன் மாத்திரைகளை விழுங்கியுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, சந்தேக நபரின் வயிற்றில் எஞ்சியுள்ள கொக்கைன் மாத்திரைகளை அகற்றுவதற்கான முயற்சிகளை நீர்கொழும்பு பொது வைத்தியசாலை வைத்தியர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த 'பியுமா'வின் விளக்கமறியல் நீடிப்பு

பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 'பியுமா' என்று அழைக்கப்படும் பியூமி ஹஸ்திக என்பவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று (புதன்கிழமை) உத்தரவிட்டுள்ளது.

இவர் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரும்பாதாளஉலககும்பலின் தலைவருமான 'குடு சலிந்து' என்று அழைக்கப்படும் சலிந்து மல்ஷிக என்பவரின் முக்கிய உதவியாளர் ஒருவர் ஆவார்.

பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 'பியுமா' துபாயில் வைத்து கைது செய்யப்பட்டு கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி அன்று இலங்கைக்கு அழைத்துவரப்பட்டநிலையில்நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (05)

# டிப்பர் வாகனம் - ஓட்டோ மோதி கோர விபத்தில் தாய் சாவு; தந்தையும் இரு பிள்ளைகளும் காயம்

ஹொரணை - கொழும்பு பிரதான வீதியில் கொனபொல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் தாய் உயிரிழந்துள்ளதுடன் தந்தை மற்றும் இரண்டு பிள்ளைகள் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

டிப்பர் வாகனம் ஒன்று முச்சக்கரவண்டி ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது முச்சக்கரவண்டியில் பயணித்த தாயும் தந்தையும் இரண்டு பிள்ளைகளும் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் தாய் உயிரிழந்துள்ளார்.

32 வயதுடைய தாயொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த தந்தையும் இரண்டு பிள்ளைகளும் களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

7வயதுடையமகனும்4வயதுடைய மகளுமே காயமடைந்துள்ளனர்.

இவர்கள் நால்வரும் வியாழக் கிழமை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்காக குடும்பத்துடன் தங்களது சொந்த ஊருக்கு முச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (05)

# மோ. சைக்கிள் - சைக்கிள் விபத்தில் ஒருவர் இறப்பு

## அமுகொடையில் சம்பவம்

பிட்டிகல - எல்பிட்டிய வீதியில் அமுகொடை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பிட்டிகல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

பிட்டிகலவில் இருந்து எல்பிட்டிய நோக்கிப்பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று அதே திசையில் பயணித்த சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளின் செலுத்துனரும் சைக்கிளின் செலுத்துனரும் எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், சைக்கிளின் செலுத்துனர் மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பிட்டிகல, அமுகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பிட்டிகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# பாதாள உலகக முக்கியபுள்ளியின் உதவியாளர்கள் நான்கு பேர் கைது

பாதாள உலக கும்பலைச் சேர்ந்தவரும் பிரபல போதைப்பொருள் கடத்தல் காரருமான 'திப்பிட்டிகொட சக்தி' என்பவரின் உதவியாளர்கள் நால்வர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் அக்மீமன, பின்னதுவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு, கிராண்ட்பாஸ், கொட்டாஞ்சேனை, மடபாத்த மற்றும் களனி ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 31 முதல் 38 வயதுக்குட்பட்டவர்கள் ஆவார்.

சந்தேக நபர்களிடமிருந்து 205 கிராம் 740 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், கார் மற்றும் 4 கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருளின் மொத்த பெறுமதி 30 லட்சம் ரூபாவுக்கும் அதிகம் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆட்கடத்தலைத் தடுக்க தீவிர நடவடிக்கை தேவை

கடந்த சில வருடங்களாக இலங்கை எதிர்நோக்கிவரும் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அரசு அனுமதித்துள்ள முறையான வழிகளில் வெளிநாட்டு வேலை பெற்று மத்தியகிழக்கு மற்றும் கொரியா போன்ற நாடுகளுக்குச் செல்வோரைவிட சட்டத்திற்குப் புறம்பாக, களவாக, மு–றைகேடாக வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்பவர்கள் எண்ணிக்கையும் பெருமளவு அதிகரித்துள்ளது.

இவ்வாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பைத் தேடிக்கொண்டிருந்த பலரும் மனித கடத்தல்காரர்களால் பாதிக்கப்பட்டிருக்கும் செய்திகள் அண்மைக் காலமாக ஊடகங்களில் அதிகம் வெளியாகின்றன. இது தொடர்பில் மேலும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசு வலுவான நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தையும் இது தெளிவாகக் காட்டுகிறது.

மனிதக் கடத்தல் என்பது உலகம் முழுவதும் தொடர்ந்து நடந்துவரும் பரவலான குற்றமாகும், இது ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளைத் தமது லாபத்திற்காக பயன்படுத்துகிறது. இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குற்றவியல் வலையமைப்புக்கள் பல்வேறு அதிகார வரம்புகளில் செயல்படுகின்றன, சட்டக் கட்டமைப்பில் உள்ள இடைவெளிகள் மற்றும் வேறுபாடுகள் பயன்படுத்திக் கொள்கின்றன. இதனால் இலங்கையில் அதிகம் பாதிக்கப்பட்ட சமூகமாக தமிழ்ச் சமூகமே இருக்கின்றது. கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக தமிழர்கள் இந்த ஆட்கடத்தலால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

எனவே அத்தகைய கடத்தல் முயற்சிகளின் தாக்கத்தைக் குறைக்க சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் விழிப்புணர்வை உருவாக்குவது இன்றியமையாததாகும். எந்த ஒரு அரசும் தாங்களாகவே செய்யக்கூடிய பணி இது. போர் முடிந்த சூழலில் இத்தகைய விழிப்புணர்வு நடவடிக்கை வேகப்படுத்தப்பட்டது. குறிப்பாக ஆஸ்திரேலியா நோக்கிய இலங்கையர்களின் படையெடுப்பைக் குறைக்க அந்த நாட்டுத் தூதரகத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகளும் அரசுப் படையினரின் கண்காணிப்பு நடவடிக்கைகளும் பெரிதும் பயனளித்தன. இருப்பினும் பொருளாதார நெருக்கடியின் பின்னர் இந்தப் பிரச்சினை மீண்டும் பெரியளவில் தலைதூக்கியுள்ளது.

மிக அண்மையில் மியான்மரில் உள்ள 'சைபர் கிரைம் முகாம்களுக்கு' இலங்கையர்கள் கடத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறித்து தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழு (NAHTTF) எச்சரிக்கை விடுத்திருந்தது. ஆனால், அதனைத் தடுப்பதற்கான அரசு மட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை என்பது கவலை தருவதாகும்.

அது மட்டுமல்ல அண்மையில் கனடாவிற்கு சுற்றுலாவிகளாகச் சென்ற பலர் அங்கு அகதிகளாகத் தஞ்சம் கோரிவதில் நாட்டம் கொண்டிருந்தனர். அதனை ஊக்குவிப்பதிலும் இந்த மனிதக் கடத்தல்காரர்களின் பங்கு பெரியளவில் இருந்தது. சுற்றுலாவிகளாகச் சென்று கனடாவில் தங்குமிட உரிமையைப் பெறமுடியாது, வேலை வாய்ப்பைப் பெற முடியாது என்று நிச்சயமாகத் தெரிந்தபோதும் ஆட்கடத்தல்காரர்கள் பொய்யான நம்பிக்கைகளையும் வாக்குறுதிகளையும் வழங்கி தமிழர்கள் கனடா நோக்கிச் செல்ல உந்துதல் கொடுத்தனர். மேற்கு நாடுகளை நோக்கி தமிழர்கள் புலம்பெயர்வதற்கு இந்த மனிதக் கடத்தல்காரர்கள் நீண்டகாலமாகவே ஒரு முக்கிய சக்தியாகச் செயற்பட்டு வருகின்றனர்.

இவர்களைக் கட்டுப்படுத்தவும் சட்டபூர்வமற்ற புலம்பெயர்வுகளைத் தடுக்கவும் ஆளும்தரப்பு இன்னும் அதிகமாக செய்யவேண்டும். அமெரிக்க இராஜாங்கத்திணைக்களம் 2024 ஆம் ஆண்டு ஆட்கடத்தல் தொடர்பான தனது அறிக்கையில், இலங்கை ஆளும்தரப்பு ஆட்கடத்தலை ஒழிப்பதற்கான குறைந்தபட்ச தரங்களைக்கூட முழுமையாகப் பூர்த்தி செய்யவில்லை என்று குறிப்பிட்டுள்ளது. அதேநேரம் அவ்வாறு செய்வதற்கு குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

கடத்தல்காரர்களின் தண்டனையை அதிகரிப்பது, அதிக கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு சேவைகளை வழங்குதல், பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான கொள்கை மாற்றங்கள், குற்றவியல் நீதி நடவடிக்கைகளில் அதிக பாதிக்கப்பட்டவர்கள் பங்கேற்றதாக அறிக்கை செய்தல், மேலும் பல ஆட்சேர்ப்பு நிறுவனங்களின் உரிமங்களை ரத்து செய்தல் மற்றும் தடுப்புப்பட்டியலில் சேர்த்தல் ஆகிய நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படவேண்டும் என்று அந்த அறிக்கை கூறுகின்றது.

இவற்றைக் கவனத்தில் எடுத்து, மனிதக் கடத்தலால் தொடர்ந்தும் சுரண்டப்படும் இலங்கையர்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, அரச தீவிரமான நடவடிக்கைகளை முடுக்கிவிட வேண்டிய தருணம் இது.

# நடிகர் விஜய் கூட்டிய மாநாடு

**வீரபாண்டியன்**

தமிழகப் பொது வாழ்விற்கு ஒரு மக்கள்



செல்வாக்குள்ள தலைமை தேவைப்படுகிறது. மக்கள் தலைவராக விளங்கிய எம்.ஜி.ஆர். அவர்களுக்குப் பிறகு அந்த இடத்தை இன்னும் அதிகமான வாக்கு எண்ணிக்கையோடு நிரப்பினார் செல்வி ஜெயலலிதா. அதேநேரத்தில் தொடர்ந்து தனது இருப்பிடத்தைத் தக்க வைத்துக்கொண்டே வந்தார் கருணாநிதி.

அண்மைக் காலத்தில் இந்த மூன்று பெரும் தலைவர்களுக்குப் பிறகு மகத்தான மக்கள் சக்தியாக விஸ்வரூபம் எடுத்து நிற்கும் தலைவர்கள் இல்லை என்பதை நாம் ஒப்புக் கொண்டே ஆகவேண்டும். அதிகாரிகள் வரலாம்; நிர்வாகிகள் வரலாம்; அரசியல் ஆருடம் சொல்லும் அறிஞர் பெருமக்கள் வரலாம்; ஆனால் 'கடைக்கோடி மனிதனுக்கும் கடைத்தேற்றம் தருவான்' என்று நம்பிக்கை அளிக்கக்கூடிய ஒரு தலைவன் வருவது மிக மிக முக்கியமானது. ஜனநாயகம் அதையே விரும்புகிறது.

எல்லாத்தரப்பு மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மாமனிதனாக ஒருவன் வளர வேண்டும் என்றால் அவனுக்குள் ஒரு மகத்தான சக்தி இருக்கவேண்டும். அந்தச் சக்தி என்ன என்பதை உணர்ந்துகொள்கிறவர்களே தன்னை அதற்கேற்பச் செப்பம் செய்துகொள்ள முடியும். அந்த நிலை இன்றைக்குத் தமிழகத்தில் இல்லை என்பதை நாம் நெஞ்சுரத்தோடு ஏற்றுக்கொள்ளவேண்டும்.

'மக்களுக்காக... மக்களால்... மக்களோடு...!' என்று மக்களாட்சியை வரையறுப்பார்



அமெரிக்க அதிபராக இருந்த ஆபிரகாம் லிங்கன். 'மக்களிடம் செல்லுங்கள்; அவர்களிடமிருந்தே கற்றுக்கொள்ளுங்கள்; பின்னர் அவர்களுக்காகவே வாழுங்கள்...!' என்பார் சோவியத் யூனியனை உருவாக்கிய லெனின். 'மக்கள் குரலே மகேசன் குரல்...!' என்பார் இந்திய தேசத் தந்தை மகாத்மா.

மக்களோடு மக்களாகக் கிடந்து உழன்று, ரத்தமும் சதையுமாக அவர்களோடு கலந்து, அவர்கள் இல்லாமல் நான் இல்லை; நான் இல்லாமல் அவர்கள் இல்லை..!' என்று வாழுகிற இயல்பே ஒரு தலைவனை வடிவமைக்கிறது.

உட்பரிகையில் அமர்ந்துகொண்டு ஊருக்கு உபதேசம் செய்யாமல், பிரச்சினையின் ஆழத்தைப் புரிந்துகொண்டு அதன் அடி வேர் வரை சென்று, அதனை 'வேரும் வேரடி மண்ணுமாகக்' கிள்ளி எறிகிற நல்ல மனிதர்களே வெற்றி பெறுகிறார்கள். மக்கள் தலைவராக உயர்கிறவர் மாபெரும் அறிஞராக இருக்கவேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. ஆனால் தலைசிறந்த மனிதாபிமானியாக இருக்கவேண்டும் என்பது அரிச்சுவடிப் பாடம்.

நடிகர் விஜயின் மாநாட்டைப் பலர் பாராட்டலாம்; சிலர் பழித்துரைக்கலாம்; எதிர்க்கும் சக்திகள் எள்ளி நகையாடலாம்; போற்றும் சக்திகள் புகழ் பாடலாம்; எது எப்படி இருப்பினும் அந்த மாநாடு பேசு பொருளாகிவிட்டது என்பதில் மாற்றமில்லை. எல்லோரும் அமர்ந்து விஜயின் அரசியல் பிரவேசத்தை அலசிக் காய வைத்துக் கொண்டிருக்கின்றனர் என்பதிலிருந்தே அவர் மீது உலகத்தின் கவனம் படியத் தொடங்கிவிட்டது என்பது நூறு விழுக்காடு உண்மை.

எண்ணிக்கை முக்கியமில்லை. ஒரே இடத்தில் இத்தனைப் பெரிய கூட்டத்தைக் கூட்ட ஒரு தனி மனிதனால் முடிந்திருக்கிறது என்பதை மனம் படைத்தவர்கள் பாராட்டியே தீருவார்கள். ஊரை அடித்து உலையில் போடவில்லை – உண்டியல் குலுக்கவில்லை – துண்டேந்தி தட்டடிக்கவில்லை – பாடுபட்டுச் சேர்த்த சொந்தப் பணத்தை அவர் ஒருவராகவே செலவழித்து ஊரைத் திரட்டியிருக்கிறார். அவர் பல பத்தாண்டுகளாக ஓடி, ஆடி சம்பாதித்த பணம் இப்போது ஒரு இயக்கத்தைக் கட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# நடிகர் விஜய் கூட்டிய மாநாடு

4ம் பக்கதொடர்ச்சி ...........

'காலம் முழுக்க ஓடி ஓடிச் சம்பாதித்துக் காணப் போவது என்ன....? என்னை வாழ வைத்த மக்களுக்காக இதை நான் செலவழிக்கிறேன்...!' என்று நடிகர் விஜய் அறிவித்தபோது அவரது பெருந்தன்மை வெளிப்பட்டது.

கூட்டத்தைக் கூட்டி முடித்துவிட்டு யாரும் சாதிக்காததை நாம் சாதித்துவிட்டோம் என்று அவர் பூரித்துப் போயிருக்கும் பொன்னான தருணம் இது. இந்த நேரத்தில் நடிகர் விஜய் நெஞ்சில் நிறுத்த வேண்டிய சிந்தனை ஒன்று உண்டு. கூட்டம் உணர்ச்சி வழிப்பட்டதாக இல்லாமல் அறிவு வழிப்பட்டதாக உருவாக்கப்படவேண்டும். கூடிக் கலைகிற கூட்டத்தில் கும்மாளம் இருக்கும்; குதியாட்டம் இருக்கும். வெற்றிக் களிப்பும்– வெறித்தனமும்– தலைவிரித்தாடும். கட்டற்ற காட்டாற்றைப் போலப் பீறிட்டுக் கொண்டு வரும் அந்த வெள்ளத்தை வாய்க்கால் வழியோடிப் பயிர்களுக்குப் போய்ச் சேருகிற பாலாறாக மாற்ற வேண்டியது அவரது கடமை.

உணர்ச்சி வெறியின் உச்சத்தில் ஆடுவோரை அறிவு வழிப்பட்டவர்களாக ஆக்க வேண்டியது அவரது தார்மிகக் கடமை. அவர்களுக்கு விஜய் அரசியல் வகுப்பு எடுத்தாகவேண்டும். கட்சிக் கல்வியை நடத்த வேண்டும். நமக்கெதிரே இருக்கிற சமுதாயக் கடமை என்ன,– நாம் சாதிக்கப்போவது என்ன,– நம்முடைய திசைவழிப் பயணம் என்ன – என்பதை அவர்களுக்கு உணர்த்தியாக வேண்டும்.

கூடிய கூட்டத்தை அப்படியே விட்டுவிட்டால் அது தறிகெட்டு ஓடும்; தலைவிரித்தாடும். அவர்களைப் பக்குவப்பட்ட படைவீரர்களாகச் செதுக்கியாக வேண்டும். போருக்குப் புறப்படும் படை மறவர்கள் என்று அவர்களிடம் பரணி பாடுவதைவிட ஊருக்குத் தொண்டாற்ற வந்த உண்மைஊழியர்கள்நீங்கள்என்றுஉணர்த்தவேண்டும்.

ஷஎதிரே இருப்பது இரண்டு பெரிய திராவிட இயக்கங்கள் என்பதை நீங்கள் நினைவில் பதிக்க வேண்டும். அவர்கள் முக்கால் நூற்றாண்டைக் கண்டுவிட்ட முழுநேர அரசியல்வாதிகள். கிராமம் கிராமாக ஊடுருவிக் கிடக்கிற பெரும்படை. தத்துவார்த்த தெளிவு – ஆழமான வாசிப்பு – அயராத உழைப்பு – சமரசமற்ற போர்க்குணம் – இவற்றோடு அரசியல் பகைவர்களைச் சந்தித்தாகவேண்டும்.

'நாங்கள்தான் ஊரை வாழ வைக்க வந்த உண்மைத் தியாகிகள்...!' என்று அவர்கள் மக்களிடம் தங்களைத் தூக்கி நிறுத்தி இருக்கிறார்கள். இந்தக் கட்டமைப்பை நீங்கள் ஊடறுத்துப் பாய வேண்டும். 'நாங்களும் மக்கள் தொண்டாற்ற வந்த மகத்தான மனிதர்களே..!' என்று நீங்கள் உங்களை மெய்ப்பித்தாக வேண்டும்.

பெருந்தலைவர் காமராஜர் ஒரு முறை சொன்னார்– "என்னை எல்லோரும் 'படிக்காதவன்; பள்ளிக்கூடம் போகாதவன்' என்று பேசுகிறார்கள். எனக்கு எந்த ஆறு எங்கே தொடங்கி எங்கே போய் முடிகிறது என்பது தெரியும். எந்தப் பயிர் எங்கே விளைகிறது என்பது தெரியும். எந்த நிலத்தில் என்ன கனிம வளம் இருக்கிறது என்பது புரியும். எந்த ஊர் மக்களுக்கு என்ன பிரச்னை என்பது நன்றாக விளங்கும். இந்தப் பூகோள அறிவைத்தான் நீ பள்ளிக்கூடப் படிப்பு என்று சொல்கிறாய் என்றால் அதை நான் நேரடியாகவே அறிந்து வைத்திருக்கிறேன்...!"

மண்ணையும் மக்களையும் ஆழமாக அறிந்து வைத்திருந்ததுதான் காமராஜரின் பலம். விஜய்யும் மேடையில் முழங்கியதோடு நின்றுவிடாமல் ஊர் ஊராகச் செல்லவேண்டும். குக் கிராமங்களில்கூட அவரது காலடித் தடம் பதியவேண்டும். மக்களைச் சந்தித்து அவர்கள் பிரச்சினைகளை விவாதித்து அதற்குத் தீர்வு காணுகிற முயற்சிகளில் இறங்க வேண்டும். ஆட்சியைப் பிடித்து விடுவது மட்டுமே லட்சியம் அல்ல; சேவை அதற்கான ஒரு வழி. அதை நீங்கள் மேற்கொண்டாகவேண்டும்.

மாபெரும் மக்கள் சக்தியைப் பெற்றிருந்தாலும் எம்.ஜி.ஆர். கட்சியைத் தொடங்கியபோது தனக்கு அணுக்கமாகப் பல மூத்த தலைவர்களையும் பெற்றிருந்தார். நெடுஞ்செழியன், நாஞ்சில் மனோகரன், எஸ்.டி.சோமசுந்தரம், செ.மாதவன், கே.ஏ.கிருஷ்ணசாமி, ப.உ.சண்முகம், பண்ருட்டிராமச்சந்திரன், கே.ஏ.மதியழகன், க.ராசாராம் போன்ற பல தலைவர்கள் அவருக்கு அரசியல் ஆலோசனைகளை வழங்கினர். எல்லாவற்றுக்கும் மேலாக அவருக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் எம்.கல்யாணசுந்தரமும் அரசியல் விஷயங்களை வகுக்க உதவினார்கள். இல்லையெனில் கருணாநிதி என்னும் அரசியல் சாணக்கியரை எம்.ஜி.ஆர். அவ்வளவு எளிதாகக் களம் கண்டிருக்க முடியாது.

தமிழ்நாடு அரசியலில் அண்ணா, கருணாநிதி, ஜெயலலிதா, இப்போதைய மு.க.ஸ்டாலின் அனைவரது வெற்றிக்கும் கூட்டணிதான் அடிப்படைக் காரணம் என்பதையும் மறந்துவிடக் கூடாது. தனிமனித மூளை மட்டுமே எதையும் சாதித்து விடாது என்பதுதான் நிதர்சனமான உண்மை. சூதும் சூழ்ச்சிகளும் நிறைந்த அரசியல் உலகத்தில் கூட்டணிக் கட்சிகளின் பலமும், அறிஞர்களின் சுற்றமும் உங்களை அரணாக நின்று காக்கும்.

உங்களுக்கு முன்னர் கட்சி தொடங்கிய திரை உலகப் பிரபலங்கள் பலரும் ஏன் தங்கள் இயக்கத்தை வெற்றி முகட்டிற்குக் கொண்டு செலுத்த முடியாமல் குடை சாய்ந்து போனார்கள் என்பது குறித்து நீங்கள் ஓர் ஆய்வை நடத்த வேண்டும். எம்.ஜி.ஆர். மட்டும் எப்படி வெற்றிக்கனியைத் தட்டிப் பறித்தார் என்பதையும் சிந்திக்க வேண்டும்.

'கூத்தாடிகள் நாடாள முடியாது..!' என்று சொன்ன பழைய சித்தாந்தம் பயனற்றுப் போய்விட்டது. மக்களுக்கு நன்றாகத் தெரிந்த ஒரு முகம் தேவைப்படுகிறது. அதேவேளையில் திரையுலகப் புகழ் மட்டுமே தலைவனாக மிளிர்வதற்குப் போதுமானதல்ல. தேனீக்கள் தேன்கூட்டைக் கட்டுவது போல கொஞ்சம் கொஞ்சமாக அரசியல் சித்தாந்தத்தின் அத்தனை பக்கங்களையும் பயிற்சியின் வழியாகவே பெற்று பக்குவப்படலாம்.

இறுதியாக ஒன்று. மத்தியில் ஆளும் கட்சியையும் மாநிலத்தை ஆளும் கட்சியையும் ஒரே நேரத்தில் சம தூரத்தில் வைத்திருக்கிறீர்கள். அதாவது உங்களுக்கு இப்போது களத்தில் இரண்டு எதிரிகள். இவர்களை நீங்கள் சந்தித்தாகவேண்டும். இதற்கு உலகப் பொதுமறை தந்த வள்ளுவன் ஒரு வழித்தடம் போட்டுக் கொடுத்திருக்கிறான். அந்தக் குறளோடு இந்தக் கட்டுரையை நிறைவு செய்யலாம்:

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்.

அதாவது மண்ணை ஆள்கிற மன்னாதிமன்னர்களையும் வினைத்திட்பம் மிக்கவன் வென்று முடித்துவிடுவான் என்கிறான் வள்ளுவன். நீங்கள் உங்கள் செயல்பாட்டை எப்படிக் கொண்டு செலுத்தப் போகிறீர்கள் என்பதைப் பொருத்தே உங்களின் வரலாறு வரையப்படும்.



காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தலுக்கு சகல நடவடிக்கைகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பூர்த்தி

பொதுத் தேர்தலுக்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. வன்முறை சம்பவங்கள் எதுவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதியப்படவில்லை, பாதுகாப்பு பணிகளில் முப்படையினரும் ஈடுபட்டுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அதிகாரியுமான திருமதி ஜேஜே முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பழைய மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது மாவட்டத்தில் தேர்தல் கள நிலைவரம் சம்பந்தமாக இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

இதன்போது மேலும் அவர் தெரிவிக்கையில் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற உள்ள பொதுத் தேர்தலுக்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக மாவட்டத்தில் 6,750 அரச அதிகாரிகள் கடமையில் ஈடுபட உள்ளனர்.

மாவட்டத்தில் 442 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாக்குஎண்ணும் நிலையமாக மட்டக்களப்பு இந்துக்கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 46 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் வாக்காளர் அட்டைகள் தேர்தல் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுவரை வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் தங்களது பகுதிகளில் உள்ள தபால் நிலையத்துக்கு சென்று அவற்றை பெற்றுக் கொள்ள முடியும். மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 218 தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பாரிய வன்முறை சம்பவங்கள் இதுவும் மாவட்டத்தில் பதியப்படவில்லை. முப்படையினரும் மாவட்டத்தின் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

தேர்தல் பிரச்சாரப் பணிகள் யாவும் நிறைவடைந்துள்ள நிலையில் இதனை மீறி செயற்படுபவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன. மாவட்டத்தில் தேர்தல் காலத்தில் அனர்த்த நிலைகள் ஏற்பட்டால் அவற்றிற்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.எனவும் பொதுமக்கள் நேர காலத்துடன் சென்று வாக்களிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அதிகாரியுமான திருமதி ஜேஜே முரளிதரன் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாவட்டத்தின் பிரதான வாக்கு எண்ணும் நிலையமான இந்துக் கல்லூரியில் தேர்தல் ஆயத்த பணிகள் சம்பந்தமாக மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட குழுவினர் செவ்வாய்க்கிழமை கள விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டனர். தேர்தல் போக்குவரத்து கடமைகளில் ஈடுபட உள்ள வாகனங்கள் புதிய தொழில்நுட்பத்தின் மூலம் கண்காணிக்கப்படபடவுள்ளன.

நாடாளுமன்ற தேர்தலுக்கான பணிகள் மாவட்டத்தில் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன. தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அரச அதிகாரிகள் உரிய நேரத்திற்கு வருகை தந்து வாக்கு பெட்டிகளை வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லுமாறும் இதற்காக போக்குவரத்து கடமைகளில் ஈடுபட உள்ள வாகனங்கள் புதிய தொழில்நுட்பத்தின் மூலம் கண்காணிக்கப்பட உள்ளன எனவும் வாக்களிப்பு நிறைவடைந்த பின்னர் மட்டக்களப்பு இந்துக் கல்லூரிக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்து வரப்பட உள்ளன எனவும் அதன் பின்பு தபால் மூல வாக்களிப்புகள் என்ன படவுள்ளன.

இம்முறை தேர்தல் பணிகளில் 1,900 பொலிஸார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட உள்ளதுடன், 87 விசேட கண்காணிப்பு பொலிஸ் பிரிவினரும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். தேர்தல் கண்காணிப்பு பணிகளில் உள்நாட்டு வெளிநாட்டு கண்காணிப்பாளர்களும் பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இடம்பெற உள்ள தேர்தலை எவ்வித வன்முறைகளும் இன்றி அமைதியாக நடத்த அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு தேவை.

தேர்தல் பிரசாரப் பணிகள் நிறைவடைந்துள்ள இந்த அமைதியான காலகட்டத்தில் எவரும் சட்டவிரோத பிரசாரப் பணிகளில் ஈடுபட வேண்டாம் எனவும் அதனை மீறி நடப்போர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை தேர்தல் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும். என மாவட்ட பிரதி தேர்தல் ஆணையாளர் சி.பி.எம் சுபியான் இந்துக்கல்லூரியின் தேர்தல் பணிகள் பார்வையிட்டதன் பின் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

(05)

# பொதுத் தேர்தலுக்காக நுவரெலியா மாவட்டத்தில் அனைத்து நடவடிக்கைகளும் தயாராக உள்ளது!

## தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி தெரிவிப்பு

2024 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்காக நுவரெலியா மாவட்டத்தில் அனைத்து நடவடிக்கைகளும் தயாராக உள்ளதாக மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் நுவரெலியா மாவட்ட அரச அதிபருமான நந்தன கலபட தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்திற்கான 08 நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்ய 17 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 11 சுயேச்சை குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தி 308 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்

செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு விசேட அறிக்கையொன்றை வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் 534 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது. சிரேஷ்ட வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர்களுக்கு வாக்குப்பெட்டிகள், வாக்குச் சீட்டுகள் ஏனைய உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் நேற்று வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன என தெரிவித்தார் .

நுவரெலியா மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பதிவான மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 605,292, அதாவது நுவரெலியா-மஸ்கெலியா தொகுதியில் 347,646 பேரும் கொத்மலைத் தொகுதியில் 88,219 பேரும் ஹகுரன்கெத்த தொகுதியில் 78,437 பேரும் வலப்பனை தொகுதியில் 90,990 பேரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை தபால் மூலம் வாக்களிக்க தகுதியான வாக்காளர்களின் எண்ணிக்கை 20,502 ஆகும். தேர்தல் கடமைகளுக்காக 10,000 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், 2,500 பொலிஸார் மற்றும் இராணுவ அதிகாரிகள் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனஎனவும் எந்தவொரு அனர்த்த நிலைமையையும் எதிர்கொண்டு தேர்தல் நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்துவதற்கு அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் தயார்படுத்தப்பட்டுள்ளன தெரிவித்தார்.

இதேவேளை வாக்கெண்ணும் மத்திய நிலையமாக நுஃகாமினி மத்திய மகாவித்தியாலயமும் (தேசிய கல்லூரி) நுவரெலியா மாவட்டத்தில் மாவட்டச் செயலகமும் வாக்கெண்ணும் மத்திய நிலையங்களாக செயற்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது எனவும் நுவரெலியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி நந்தன கலபட தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# 387 வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் அனுப்பிவைப்பு

## வன்னி மாவட்டத்தில் தேர்தல் பணிகளில் 5000 அரச ஊழியர்கள்



வன்னி தேர்தல் மாவட்டத்தில் உள்ள 387 வாக்களிப்பு நிலையங்களுக்குமான வாக்குப்பெட்டிகள் மற்றும் வாக்குச்சீட்டுகள் பொலிஸாரின் பாதுகாப்புடன் நேற்று (புதன்;கிழமை) அனுப்பிவைக்கப்பட்டதாக வன்னி மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் வவுனியா அரச அதிபருமான பி.எ.சரத் சந்திர தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறுகையில் -

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் 387 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் 152, முல்லைத்தீவில் 137, மன்னாரில் 98 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த நிலையங்களுக்கு தேவையான வாக்குப்பெட்டிகள், வாக்குச்சீட்டுகள், ஏனைய ஆவணங்கள் அந்தந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள மத்திய நிலையங்களில் இருந்து நேற்று காலை அனுப்பிவைக்கப்பட்டன.

இதேவேளை வன்னி தேர்தல் மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 306081 வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

அந்த வகையில் வவுனியாவில் 128585 பேரும் முல்லைத்தீவில் 86889 பேரும் மன்னாரில் 90607 பேரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

தேர்தல் கடமைகளுக்காக வன்னியில் 4995 அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், 3898 பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், இதுவரை 107 தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் 50 முறைப்பாடுகளும் மன்னார் மாவட்டத்தில் 22 முறைப்பாடுகளும் முல்லைத்தீவில் 35 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. அவை சிறிய முறைப்பாடுகளாகவே உள்ளன.

இதேவேளை வவுனியாவில் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, மன்னார் மாவட்டத்தில் மாவட்டச் செயலகம், முல்லைத்தீவில் மத்திய மகா வித்தியாலயம் ஆகியவை வாக்கெண்ணும் மத்திய நிலையங்களாக செயற்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. - என்றார். (05)

# தேர்தல்கள் சட்டத்துக்கும் பொதுச் சட்டத்துக்கும் அமைய மக்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்



நாடளாவிய ரீதியில் 1,3421 வாக்களிப்பு மத்திய நிலையங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தேர்தல்கள் சட்டத்துக்கும், பொதுச் சட்டத்துக்கும் அமைய பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்கு பொலிஸ் உட்பட முப்படையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வாக்களித்தன் பின்னர் வீடுகளுக்கு செல்லுங்கள், பொது இடங்களில் ஒன்று சட்டம் மற்றும் ஒழுங்குக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுவதை இயலுமான வகையில் தவிர்த்துக் கொள்ளுங்கள். அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கும், அதனைத் தொடர்ந்து சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்கும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

தேர்தல் பணிகள் மற்றும் பாதுகாப்பு விடயங்கள் குறித்து பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பதில் பொலிஸ்மா அதிபரும், சட்டத்தரணியுமான நிஹால் தல்துவ குறிப்பிடுகையில் -

வேட்பாளர் ஒருவர் வாக்காளர்களுக்கு வாக்களிப்பு மத்திய நிலையத்துக்கு செல்வதற்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது சட்டவிரோதமானது. விசேட தேவையுடையவர்கள். வயதுமுதிர்ந்தோர் ஆகியோருக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குதாயின் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகத்திடம் முன்கூட்டியதாகவே அனுமதி பெற வேண்டும்.

தேர்தல் பணிகளின் நிமித்தம் 63,145 பொலிஸ் உத்தியோகஸ்த்தர்கள் நேரடியாக கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அத்துடன் 3200 விசேட அதிரடி படையினரும், 6000 இணை சேவை உத்தியோகஸ்த்தர்களும், 11 ஆயிரம் முப்படையினரும் 12227 சிவில் பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர்களும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

3109 நடமாடும் சேவைகளும், வாகன சோதனைகளுக்காக 269 வீதி தடைகளும் அமைக்கப்பட்டுள்ளன. 1591 தற்காலிக தொழிலாளர்கள் கடமைகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். பாதுகாப்பு கடமைகளுக்காக 4525 வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

பொதுத்தேர்தல் பணிகள் மற்றும் பாதுகாப்பு நிமித்தம் பொலிஸார் உட்பட முப்படையினர் உள்ளடங்களாக சுமார் 90 ஆயிரம் பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர்கள் கடமைகளில் ஈடுபடவுள்ளனர். தேர்தல் மற்றும் பொதுச் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வாக்களிப்பு முடிவடைந்த பின்னரும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செயற்படுத்தப்படும் என்றார். (05)

# வாக்குப்பெட்டிகள் வாக்குச் சாவடிகளுக்கு யாழ்ப்பாணத்தில் எடுத்துச் செல்லப்பட்டன!

யாழ் மாவட்டத்திற்கான வாக்குப் பெட்டிகள் அனைத்தும், யாழ். மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கெண்ணும் நிலையத்தில் இருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

வாக்குப் பெட்டியை ஏற்றியவாறு முதலாவது பஸ் நேற்று (புதன்கிழமை) காலை 8.30 மணிக்கு புறப்பட்டது.

இதன்போது, யாழ். தேர்தல் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன், யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூரஸன் சூரியபண்டார ஆகியோர் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை, பாராளுமன்ற தேர்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகர் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் யாழ். மாவட்டத்தில் 4 லட்சத்து 92 ஆயிரத்து 280 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

கிளிநொச்சியில் ஒரு லட்சத்து 907 வாக்களர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

வாக்காளர்கள் வாக்களிக்க செல்வதற்கான விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக தீவக பகுதிகளுக்கு செல்வதற்கு குறிகட்டுவான் பகுதியில் இருந்து விசேட படகு சேவைகள் இடம்பெறும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு வன்முறை சம்பவமும் 62 சட்ட மீறல்களும் பதிவாகியுள்ளன. அது தொடர்பிலான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாக்களிப்பு வியாழக்கிழமை(14) காலை 7 மணியில் இருந்து மாலை 4 வரையில் வாக்களிக்க முடியும். வாக்கெண்ணும் நடவடிக்கைகள் யாழ் மத்திய கல்லூரியில் நாளை மாலை ஆரம்பிக்கப்படும்.

அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளதாக தெரிவித்தார்.

### அரச சேவைகளை டிஜிட்டல்மயமாக்கும் திட்டத்துக்கான பிரவேசம்;

# பிறப்பு, திருமண, இறப்பு சான்றிதழ்களின் பிரதிகளை வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களும் பெறலாம்

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் வசதிக்காக வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களில் இருந்து பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களின் நகல்களை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்த செயற்றிட்டம் தெரிவு செய்யப்பட்ட 07 வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் கொன்சல் ஜெனரல் அலுவலகங்கள் மூலம் முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதன்படி, குவைத், ஜப்பான் மற்றும் கட்டார் தூதரகங்கள், ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன், கனடாவின் டொரண்டோ, இத்தாலியின் மிலான் மற்றும் டுபாய் தூதரகங்கள் மூலம் இந்த முன்னோடித் திட்டத்தை செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் உள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலிருந்தும் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களைப் பெறுவதற்கு அமைக்கப்பட்டுள்ள முறைமைக்கேற்ப வெளிநாட்டுத் தூதரகங்கள் மூலம் இந்த சான்றிதழ்களை வழங்கும் வகையில் பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் வெளிவிவகார அமைச்சினால் கூட்டாக பராமரிக்கப்பட்டு ஈ.பிஎம்டி தரவுக் கட்டமைப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஆரம்ப கட்டத்தில் ஈ.பிஎம்டி தரவுக் கட்டமைப்பில் சேமித்து வைக்கப்பட்டுள்ள சுமார் 45 மில்லியன் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்கள் மட்டுமே விநியோகிக்கப்படுகிறது.

இந்தச் சான்றிதழ்கள் 01.01.1960 இற்குப் பிறகு பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்கள் என்பதோடு தரவுக் கட்டமைப்பின் ஆரம்ப கட்டத்தில் ஸ்கேன் செய்யப்பட்ட சான்றிதழ்கள் பின்னர் திருத்தப்பட்டால், அத்தகைய சான்றிதழ்கள் தரவு அமைப்பில் புதுப்பிப்பதில் சிறிது தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

(05)

# மன்னார் மாவட்ட செயலகத்திலிருந்து 98 வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் செல்லப்பட்டன

மன்னார் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்டச் செயலாளருமான க.கனகேஸ்வரன் மற்றும் மன்னார் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் வி.சிவராஜா முதலான அதிகாரிகளின் கண்காணிப்புடன் வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் இம்முறை 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

வன்னி மாவட்டத்தில் 6 உறுப்பினர்களை தெரிவு செய்ய 432 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

23 கட்சிகள், 25 சுயேச்சை குழுக்கள் உள்ளடங்கலாக 48 கட்சியினர் வன்னி தேர்தல் தொகுதியில் போட்டியிடுகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் தேர்தல் வாக்கெண்ணும் நிலையமாக மன்னார் மாவட்ட செயலகத்தில் 8 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இன்று (வியாழக்கிழமை) நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கு பாதுகாப்பு நடவடிக் கைகளுக்காக பாதுகாப்பு தரப்பினர் தயார் நிலையில் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்




4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# வட மாகாண ஆளுநரை சந்தித்தனர் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தினர்



வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகனை யாழ்ப்பாண தமிழ் சங்கத்தினர் நேற்று (வியாழக் கிழமை) காலை நல்லெண்ண அடிப்படையில் சந்தித்தனர்.

இதன்போது சங்கத்துக்கான நிரந்தர இடம் அமைப்பது தொடர்பிலும்கலந்துரையாடினர்.

அவ்வேளை, சங்க ஆட்சிக் குழு உறுப்பினர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய 'திருக்குறள் உரைநூல்' ஆளுநரிடம்கையளிக்கப்பட்டது.

தமிழ்ச்சங்கபெருந்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், தலைவர் பேராசிரியர் தி. வேல்நம்பி, முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், செயலாளர் ச. லலீசன், விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.(05)

## கொழும்பு ஆடம்பர தொடர்மாடியிலிருந்த விழுந்த

# எங்கள் மகன் தற்கொலை செய்து கொள்ளவில்லை

## நீதி வேண்டும் என்கின்றனர் பெற்றோர்

கொழும்பின் ஆடம்பர தொடர்மாடியொன்றிலிருந்து விழுந்து சர்வதேச பாடசாலையொன்றின் இரண்டு மாணவர்கள் உயிரிழந்தசம்பவம் பெரும்சர்ச்சைகளையும் பல கேள்விகளையும் ஏற்படுத்தியிருந்தது.

பலர் இது தற்கொலை என தெரிவித்த போதிலும் உயிரிழந்த மாணவர்களில் ஒருவரான ஜிவொன் ஜொரெரா சிங்கின் பெற்றோர் அதனைநிராகரித்துள்ளதுடன்இந்த சம்பவம் தொடர்பில் பல தவறாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

ஜிவோன் குறித்த தங்களின் நினைவுகளை பகிர்ந்துகொண்டுள்ள அவர்கள் அவர் உயிரிழப்பதற்கு காரணமான சம்பவங்கள் குறித்தும் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஏனையவர்களிற்கு உதவும் ஜிவோனின் மனோபாவமே ஆடம்பர தொடர்மாடியில் ஜூலை 2ம் திகதி அவர் உயிரிழப்பதற்கு காரணமாக அமைந்தது.

அன்றைய தினம் தனது உதவி தேவையாகயிருந்த ஒருவருக்கு ஜிவோன் உதவி செய்ய முயன்றார். அது அவரது இயல்பான மனோபாவம்.

இரக்கம் மிகுந்த துரதிஸ்டவசமான செயற்பாட்டின் போது அவரது உயிர் பறிக்கப்பட்டது.

எனினும் ஏனையவர்களிற்கு உதவும் அவரது அர்ப்பணிப்பின் காரணமாக நாங்கள் எங்கள் குடும்பம் அவரது மரணம் குறித்த பிழையான தகவல்களிற்கு பதிலளிக்க தீர்மானித்துள்ளோம்.

ஜிவோன் தற்கொலை செய்யவில்லை,வாழ்க்கை மீதான அவரது அளவற்ற காதலும் எதனையும் சாதகமான விதத்தில் சிந்திக்கும் மனோபாவமும் அவரது குணாதிசயங்களாக காணப்பட்டன,நாங்கள் அவரது நினைவுகளை பாதுகாப்பதற்கும்,அவரது குணாதிசயம் புரிந்துகொள்ளப்படுவதை உறுதி செய்வதற்கும் முயல்கின்றோம்.

ஜிவோன் அடாவடித்தனத்தை எதிர்கொண்ட போதிலும்,அவர் அதனை உறுதியுடன் எதிர்கொண்டார்.

அவர் சமீப மாதங்களில் துன்பமான அனுபவங் களில் இருந்து மீண்டுவந்தார், அவரால் அதிலிருந்துமீண்டெழமுடிந்தபோதிலும்இது சாதாரணமாகஎடுக்கப்படவேண்டியவிடயம் இல்லை, இதற்கு தீர்வை காண்பதற்கான தீவிர முயற்சிகள் அவசியம்.

ஜிவோன் வாழ்க்கை குறித்து மிகுந்த காதலும் ஏனையவர்களிற்கு உதவு- வது குறித்து நேர்மையான விருப்பமும் கொண்ட சிறுவன்.

அவன் ஒவ்வொரு நாளையும் உற்சாகத்துடன் மகிழ்ச்சியுடன் அணுகினான், தன்னை சுற்றியுள்ளவர்கள் வாழ்க்கையை முழுமையாக தழுவும் விதத்தில் உத்வேகத்தையளித்தான்.

அவன்கவலைகள்அற்றசிறுவன்வாழ்வதற்கு விரும்பியவன்,அவன் மிகவும் உயிர்த்துடிப்புள்ளவன்,அவனிடம் மிகச்சிறந்த குணங்கள் காணப்பட்டன.அவன் இயல்பாகவே மிகுந்த புத்திசாலி,ஏ தர மாணவன் எந்த இடத்தையும் மகிழ்ச்சிகரமானதாக மாற்றக்கூடிய சிரிப்புடையவன்.

அவன் தான் நேசித்த அனைத்து விடயங்கள் குறித்தும் அர்ப்பணிப்பு மிக்கவன்,உடற்பயிற்சி கூடத்தில் சிறப்பாக செயற்பட்டான்,அனைவரையும் உற்சாகமாக செயற்துடிப்புடன் இருக்கும்படி கேட்டுக்கொண்டான்,.

பாடசாலையில் தன்னை சுற்றியுள்ளவர்களிற்கு உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் உதவுவதில் எப்போதும் முன்னின்றான் தனது வாழ்வின் இறுதிவரை அது குறித்து அக்கறையுடன் இருந்தான்.

கடும்உழைப்புதன்னைசுற்றியுள்ளவர்களை கைதூக்கிவிடுவதற்கான அவனது அர்ப்பணிப்பு ஏனையவர்களிடமிருந்து அவனை வித்தியாசமானவனாக்கியது.

அவனதுகட்டுக்கடங்காதபுத்திசாலித்தனம், துடிப்பான ஆளுமை,மற்றவர்கள் குறித்து அக்கறை செலுத்தும் இயல்பு,முதிர்ச்சி என்பன அவனது வயதிற்கும் அப்பாற்பட்ட விடயங்கள்.

உண்மையில் அவனை போல எவரும் இல்லை.

பாடசாலையில் அடாவடித்தனத்தை எதிர்கொண்ட போதிலும் அவன் கல்வியில் மிகச்சிறந்தவனாக விளங்கினான்.சாதரண தரப்பரீட்சைக்கு தன்னை தயார்படுத்தி வந்தான்.

கல்வியில் கவனம் செலுத்துமாறு நான் அவனிற்கு எந்த அழுத்தத்தையும் கொடுக்கவேண்டிய தேவை யிருக்கவில்லை.

அவன்பாடசாலையில்அடாவடித்தனத்தை எதிர்கொண்டவேளை அது குறித்து ஆசிரியர்களிற்கு தெரிவித்தான். உதவியை கோரினான்.

இந்த வருடமே அவன் பாடசாலையில் எதிர்பாரத கசப்பான அனுபவங்களை எதிர்கொண்டான்.

ஆனால் அவன் அதிலிருந்து மீண்டுதனது வாழ்க்கையை தொடர்ந்தான்.

பாடசாலைகளில்காணப்படும்அடாவடித் தனங்களிற்குதீர்வை காண்பதற்கு பாடசாலை நிர்வாகங்கள் முன்வரவேண்டும்.

ஒவ்வொரு மாணவரும் இதனை எதிர்கொள்ளும் நிலை காணப்படுகின்றது.

மாணவர்களது உடல் உள பாதுகாப்பை உறுதி செய்வது அவசியம். - என்றனர்.(05)

# போலி இலக்கத்தகட்டுடன் சொகுசு வாகனம் தங்காலையில் மீட்பு

## வர்த்தகர் கைது

தங்காலை, விதாரந்தெனிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போலி இலக்கத்தகடு பொருத்தப்பட்ட சொகுசு வாகனம் ஒன்று மாத்தறை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் செவ்வாய்க்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த சொகுசு வாகனத்தின் உரிமையாளர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

எம்பிலிப்பிட்டிய, பல்லேகம பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரே கைதுசெய்யப்பட்டவர் ஆவார்.

இந்த சொகுசு வாகனம் மூன்றரை கோடி ரூபா பெறுமதியானது என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சொகுசு வாகனம் களுத்துறை பிரதேசத்தில் உள்ள அரசியல்வாதி ஒருவரின் சகோதரர் மூலமாக குறித்த வர்த்தகருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்

(05)

# யாழில் வேட்பாளரின் தந்தை மீது தாக்குதல்



யாழ்ப்பாணத்தில் சுயேச்சையாக போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் தந்தைமீது தாக்குதல்நடதப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின் போது காயங்களுக்குள்ளான நிலையில் வேட்பாளரின் தந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது -

கொழும்புத்துறை – நெளுக்குளம் பகுதியில் அமைந்துள்ள சுயேச்சைக் குழு வேட்பாளர் ஒருவரின் வீட்டிற்குள் செவ்வாய்க்கிழமை மாலை வன்முறைக் கும்பலொன்று அத்துமீறி உள்நுழைந்துள்ளது.

அங்கு வேட்பாளரின் தந்தையின் தலையில் இரும்பு கம்பியால் தாக்கிய அதேவேளை வீட்டின் ஜன்னல் கண்ணாடி மற்றும் மோட்டார் வாகனத்தின் மீதும் வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது.

மேலும் அயல் வீட்டின் மீதும் தாக்குதலை நடத்தி விட்டு தப்பி சென்றதுள்ளதுடன் குறித்த வீட்டில் வசிக்கும் இளைஞரின் கைமீதும் வாள் வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த விசேட அதிரடிப் படையினர் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# பௌத்த தேரரை மிரட்டிப் பணம் பறித்த இளைஞர்கள் பொலன்னறுவையில் கைது

பொலன்னறுவை, திம்புலாகல பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் பணிபுரியும் தேரர் ஒருவரை மிரட்டி 03 லட்சத்து 45 ஆயிரம் ரூபா பணம் பறித்த இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலன்னறுவை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் தெஹியத்தகண்டிய பிரதேசத்தில் வசிக்கும் 23 மற்றும் 29 வயதுடையவர்கள் ஆவர்.

சந்தேக நபர்கள் இருவரும் குறித்த விகாரைக்குச் சென்று அங்கு பணிபுரிந்த தேரரை தாக்கி நிர்வாணமாக்கி அதனை காணொளிகளாக எடுத்து சமூக ஊடகங்களில் பதிவிடுவதாகக் கூறி தேரரை மிரட்டி சுமார் ஒரு வருட காலமாக பணம் பறித்து வந்துள்ளனர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் , கையடக்கத் தொலைபேசி மற்றும்வங்கிக்கணக்குபுத்தகம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலன்னறுவை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# மேய்ச்சல் நிலம் இருந்தும் தர மறுக்கிறார்கள் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் இடையூறு

## நானாட்டான் பண்ணையாளர்கள் ஆளுநரிடம் முறைப்பாடு





மன்னார் நானாட்டான் பிரதேச பண்ணையாளர்களுக்கான மேய்ச்சல் தரவை நிலம் ஒதுக்கப்பட்டும் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் தலையீட்டால் எட்டு வருடங்களாக கையளிக்கப்படவில்லை என பணியாளர்கள் குற்றச்சாட்டினார்கள்.

செவ்வாய்க்கிழமை வட மாகாண ஆளுநரின் யாழ்ப்பாணத்தில் உள்ள தலைமைச் செயலகத்தில் தமது மேய்ச்சல் தரவை நிலங்களை மீட்டுத் தருமாறு கோரி மஜகர் கையளித்த பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

நானாட்டான் பகுதியிலுள்ள மேய்ச்சல் தரவை நிலத்தை நம்பி 2,500 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரம் கால்நடைகள் உள்ளன.

எமக்கான மேய்ச்சல் தரவை நிலம் ஒதுக்கப்பட்ட நிலையிலும் அதனை கையளிப்பதற்கு அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் இடையூறு விளைவித்து வருகின்றனர்.

மன்னாரில் உள்ள உயர் அதிகாரிகாகு மேச்சல் தரவை நிலத்தில் திருட்டுத்தனமாக காணி இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ள நிலையில் அதனை மக்கள் பாவனைக்கு வழங்க விடாமல் அரசியல் பின்னணியில் தடுப்பதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது.

மேச்சல் தரவை நிலத்தை தருமாறு எட்டு வருடங்களுக்கு மேலாக போராடி வருகிறோம். தருகிறோம் எனக் கூறுகிறார்கள். ஆனால் இதுவரை தரவில்லை.

இவ்வாறான நிலையில் வடமாகாண ஆளுநரிடம் எமது கோரிக்கையை கையளித்திருக்கிறோம். அவர் எதிர்வரும் 21ஆம் திகதி மன்னாருக்கு வருகை தந்து எமது பிரச்சினைகள் தொடர்பில் நேரில் ஆராய்வதாக தெரிவித்திருக்கிறார்.

ஆகவே எமது பிரதேச மக்கள் வாழ்வாதார தொழிலாக பண்ணை வளர்ப்பில் ஈடுபட்டுவரும் நிலையில் எமக்கான மேய்ச்சல் தரவை நிலத்தை பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கிறோம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(05)

# முல்லையில் 137 வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் நேற்று அனுப்பி வைப்பு!

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான 137 வாக்களிப்பு நிலையங்களுக்குரிய வாக்கு பெட்டிகள் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வன்னி தேர்தல் தொகுதியில் 6 நாடாளுமன்ற உறுப்பினர்களைதெரிவுசெய்வதற்கானதேர்தலுக்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 137 வாக்களிப்பு நிலையங்களிற்கே இவ் வாக்கு பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

23 கட்சிகளும், 25 சுயேச்சை குழுக்களுமாக மொத்தமாக இம்முறை வன்னி தேர்தல் தொகுதியில் 432 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

முல்லைத்தீவுமாவட்டத்தில் 86,889 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில் அவர்கள் வாக்களிப்பதற்குரிய 137 நிலையங்களுக்கும் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் இருந்து நேற்று (புதன்கிழமை) காலை 7 மணி முதல் வாக்கு பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த தேர்தலில் 1653 அரச உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளதுடன் 500 பொலிஸாரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.11.2024இல் வெளியிடப்பெற்றது